[18th August 1955

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (a) 440.

" (b) 14."

* 2081 Q.—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the number of Grama Sevaks appointed so far in the State;

(b) the number of Harijans in them;

(c) the qualifications required for Grama Sevaks;

(d) the number of applications received from Harijans candidates; and

(e) the number of applications rejected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (a) 640.

" (b) 20.

" (c) *Educational*—S.S.L.C. completed.

Age.—Above 21 and below 30 years on 1st July of the year in which recruitment is made.

" (d) & (e) Information is not available."

SRI A. RATNAM :—" கிராம சேவகர்களை நியமனம் செய்வதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டதா ? கிராம சேவகர்கள் எத்தனை பேர்கள் வேண்டும் என்று விளம்பரத்தில் கூறப்பட்டதா ? இருபது ஹரிஜனங்கள் தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கிராமங்களில் முதலில் ஹரிஜனங்கள் என்று சொல்லிக்கொள்ளவேண்டுமென்று இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அதுமாதிரி அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதைப் பரிசீலனை செய்து தீண்டாமையை ஒழிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இந்த நியமனத்தில் வகுப்புவாரியாக ஸ்தானங்கள் ஒதுக்கப்படவில்லை. அவரவர்களுடைய தகுதியைப் பார்த்துத்தான் நியமனங்கள் செய்யப்பட்டன. இதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற யோக்யதாம்சம் உள்ளவர்கள் அதாவது எஸ்.எஸ்.எல்.சி. முடித்தவர்கள் யாராயிருந்தாலும் அப்ளிகேஷன் போட்டால் அதை ஒரு கமிட்டியார் பரிசீலனை செய்து மனுதார்களை நேரில் பார்த்து தகுதியுள்ளவர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். ஹரிஜனங்கள் கிராம சேவகர்களாக நியமனம் செய்யக்கூடாது. ஹரிஜனங்கள் கிராமத்துக்கும் போகக்கூடாது என்று எவ்விதமான உத்தரவும் கிடையாது."

SRI M. NARAYANA KURUP :—" May I know whether all the Gramasevak trainees have been given employment? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Yes, Sir. We are in shortage with regard to Gramasevaks. All those who have completed the training have been absorbed."

SRI A. RATNAM :—" கிராம சேவகர்கள் எவ்வளவு காலம் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள் ? பயிற்சி காலத்தில் அவர்களுக்கு என்ன ஊதியம் கொடுக்கப்படுகிறது ? பயிற்சி காலத்தில் கிராமங்களில் அவர்கள் என்ன வேலையை செய்துவருகிறார்கள் ? "

18th August 1955]

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கிராம சேவகர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 18 மாதம் கிராம சேவைப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆங்காங்கு கிராம சேவைப் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அங்கே அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது."

SRI S. R. ARUMUGAM :—" கிராம சேவகர்களைத் தெரிந்தெடுப்பதில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அளிக்கப்படாததினாலே ஹரிஜனங்கள் குறைவாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? ஆகவே, இந்த முறையைப் போக்குவதற்கு சர்க்கார் தகுந்த ஏற்பாடு செய்வார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படாததால் ஹரிஜனங்கள் குறைவாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்வதில்லை. மனுதார்களில் ஹரிஜனங்கள் இருந்தால் அவர்களை அவசியம் தெரிந்தெடுக்கவேண்டும் என்ற முறையில்தான் கிராம சேவகர்களைத் தெரிந்தெடுக்கும் கமிட்டியார் தெரிந்தெடுத்து வருகின்றனர்."

SRI M. KALYANASUNDARAM :—" ஏற்கெனவே கிராம சேவகர்களாக வேலை பார்த்து வந்தவர்களை பயிற்ச்சி அனுப்பும்போது அவர்களுக்கு 'அலவன்ஸ்' ரூ. 35 மட்டும்தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் முன்பே வாங்கிக்கொண்டிருந்த சம்பள அளவுக்கு அலவன்ஸ் கொடுக்க சர்க்கார் யோசிக்குமா ?" 8-40 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இதற்கு தனிக் கேள்வி போட்டால் பிறகு பார்க்கலாம்."

SRI P. G. MANICKAM :—" எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் படித்து ஹரிஜனங்களில் பெரும்பான்மையோர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, இந்த ஸ்தாபனங்களில் அதிக பட்சமாய் அவர்களுக்கு வேலை கொடுக்க கவர்ன்மெண்டார் முதற்சி செய்வார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" ஹரிஜன வகுப்பிலே எஸ்.எஸ்.எல்.ஸி. "கம்ப்ளீட்" பண்ணியவர்கள் இதற்கு மனுப்போட்டு, அவர்கள் தெரிந்தெடுக்கப்படாமலிருந்தால், அதற்குத் தகவல் கொடுக்கும்படி கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்குப் பிறகு தேர்தல் முறையில் ஏதாவது மாறுதல் செய்யவேண்டுமா என்று யோசிக்கப்படும்."

SRI A. RATNAM :—" சென்னை ராஜ்யத்தில் ஹரிஜனங்களில் 4,000-க்கு மேற்பட்ட பி.எ., எம்.எ. படித்த பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த ஹரிஜனங்கள் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். இந்த மாதமே, இந்த கிராம சேவகர்களைத் தேர்ந்தெடுப்பதில் இந்திய அரசியல் சட்டப்படி இனப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டால், ஹரிஜனங்களிடமிருந்து அதிகமான மனுக்கள் வரும். எனவே இனப் பிரதிநிதித்துவ முறையில் இந்த உத்தியோகம் அளிக்கப்படும் என்று கனம் அமைச்சரவர்கள் உறுதி அளிப்பார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" ஆயிரக்கணக்கான பட்டதாரிகளும், எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களும் ஹரிஜனங்களில் இருப்பது நமக்கெல்லாம் பெருமைதான். ஆனால், அவர்கள் எல்லாம் இவ்வளவு தூரம் படித்துவிட்டு கிராமங்களில் போய் அங்கே கொடுக்கக்கூடிய வேலையைச் செய்வதற்குத் தயாராயில்லை. அதனால் தான் கிராம சேவகர்களில் ஹரிஜனங்கள் குறைவாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்."